www.padippakam.com



# களம் பல கண்ட யாழ் கோட்டை

## பகுதி: ஐந்து
## ஈழ யுத்தம் - 2


நீலவண்ணன்

கோட்டைக்குள் புகுந்த இராணுவத்தினர் முற்றுகை முறியடிப்பு எனக் கூறியதால், கோட்டைக்குள் இருந்தவர்கள் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தனர். சிறீலங்கா அரசு வானொலியில் அறிவித்தவாறு யாழ் நகரின் ஸ்ரான்லி வீதிவரை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றது என நம்பினார்கள். கடல் வழியாக வந்த இராணுவத்தினர் குருநகர் தொடர்மாடியில் முகாம் அமைத்துள்ளனர் என்றும், இப்போது புலிகள் மீது இரு தரைப் பகுதிகளிலிருந்தும் தாக்குதல் நடைபெறுகிறது என்றும், விரைவில் கோட்டையை மீட்டு எடுத்துவிடுவார்கள் என்றும் மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பினாலும், மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து பரவைக் கடலைக் கடந்து கோட்டைக்குள் நுழைந்துவிட்டோம் என்ற உணர்ச்சியாலும் உந்தப்பட்ட சில இராணுவ வீரர்கள் கவசவாகனம் ஒன்றில் ஏறிக் கோட்டையின் பிரதான வாயில் வழியாக வெளியேற ஆயத்தமாயினர்.

### நேரம் நண்பகல் 1 மணி

கோட்டைக்குள்ளிருந்து இராணுவக் கவசவாகனம் ஒன்று கம்பீரமாக வெளி வந்தது. மண் மூடைகள் அடுக்கப்பட்டு உள்ளே சுமார் பத்து இராணுவத்தினரை ஏற்றியபடி வெளிவந்த கவச வாகனம் எதுவித எதிர்ப்புமின்றி உடைந்து கிடந்த போராளிகளின் காவலரண்களைத் தாண்டிச் சென்று நின்றது. போராளிகளின் சடலங்கள் அவர்களின் கண்களில் பட்டன. உடைந்து சரிந்து கிடந்த இந்தக் கட்டட இடிபாடுகளுள் எவரும் இருக்க முடியாது என இராணுவத்தினர் கருதினர்.

உடைந்து கிடந்த கட்டடச் சிதைவுகளிடையே இருந்து எழுந்த போராளி சுரேஸ், தனது ஒற்றைக் கையில் தூக்கி இயக்கிய ஏகே 47 இலிருந்து பாய்ந்த குண்டுகள் கவச வாகனத்தில் வந்தவர்களைப் பீதிகொள்ள




வைத்தன. அதனைத் தொடர்ந்து இடிபாடுகளிடையேயிருந்து எழுந்த போராளிகளின் துப்பாக்கிகள் முழக்கமிட்டபோது தாம் பொறிக்குள் சிக்கிக் கொண்டமையைப் புரிந்து கொண்டனர். கவச வாகனத்திலிருந்து குதித்தோட முற்பட்ட போது பொலிஸ் நிலைய வாசலிலேயே ஏழு இராணுவத்தினர் சடலமாகச் சரிந்தனர். போராளி சுரேஸ் காயமடைந்து விழுந்தான் தப்பியோடிய இராணுவத்தினர் ஓடிக் கோட்டைக்குள் புகுந்துகொண்டனர். சிறீலங்கா இராணுவத்தினரின் இறுதி முயற்சியும் முறியடிக்கப்பட்டது.

### நேரம் பிற்பகல் 3 மணி.

வானில் குண்டுவீச்சு விமானங்கள் தோன்றி, கண்மூடித்தனமாகக் குண்டுகளை வீசிச் சிதைக்கத் தொடங்கின. அன்று தொடக்கம் 25 செப்டம்பர் 1990 வரை குண்டு வீச்சுக்கள் தொடர்ந்து நிகழ்ந்தன. கோட்டையை மீட்க வந்த இராணுவம் கோட்டைக்குள் மாட்டிக் கொண்டு தவித்தது.

கோட்டையைச் சுற்றிப் போராளிகளின் காவலரண்கள் மீண்டும் படிப்படியாக அமைக்கப்பட்டன; பலப்படுத்தப்பட்டன. அதேவேளை இடையிடையே வெளியிலிருந்து கோட்டைக்குள் ஏவப்பட்ட பசிலன் குண்டுகள் கோட்டைக்குள் சிக்கிக் கொண்ட இராணுவத்தினரைக் கலங்கவைத்தன. அத்தோடு காயமடைந்தோர், உணவுத்தட்டுப்பாடு, வெடிப்பொருட் தட்டுப்பாடு அனைத்தும் சேர்ந்து 'சரணடைவதா, தப்பி ஓடுவதா' என்ற இறுதி முடிவு ஒன்றிற்கு வரவேண்டிய அழுத்தத்தை ஏற்படுத்தின.

### 26 செப்டெம்பர் 1990.

அதிகாலை 12.15. மறுநாள் தியாகி திலீபனின் 3ஆம் நினைவு நாள். விடுதலைப் புலிகள் கோட்டையை விடுவிப்பதற்கான இறுதி முயற்சியில் இறங்கினர். நள்ளிரவுப் பயங்கரத்தில் கோட்டைக்குள் 'பசிலன் 2000' குண்டுகள் 50 வரையில் மழையாக இறங்கின. சிறீலங்கா இராணுவத்தினர் எதிர்நிற்க முடியாது தப்பி ஓடிவிடும் முயற்சியில் ஈடுபட்டனர். முன்னரே திலீபனின் நினைவு நாளில் நிச்சயம் கோட்டை தாக்கப்படும் என்பதை அவர்கள் தீர்மானித்து வைத்திருந்தார்கள். அதனால் மக்கள் வங்கிக்குச் சொந்தமான நகைகள், வங்கிக்குச் சொந்தமான பணம் என்பன இருந்த இரும்புப் பெட்டிகள் வெடிவைத்துத் தகர்க்கப்பட்டு அவை எடுத்துக்கொள்ளப்பட்டன. பழைய துவக்குகள் ஆயிரக்கணக்கில் தீயிடப்பட்டன. வாகனங்கள் பல தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. இவ்வளவும் நிகழ்த்திவிட்டுத் தயாராக இருந்தனர்.

பெண்கள் சிறைச்சாலைக்கு அருகில் கோட்டை மதிலின் தென் பக்கத்தில் ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட நீர் வழி (Water Gate) இருந்தது. அது பின்னர் கழிவுகளை அகற்றுவதற்கான வாயிலாகப் பயன்படுத்தப்பட்டது. கோட்டை சிறைச்சாலையாக மாறியபோது, அது பாதுகாப்பில்லை என எண்ணி வாயிலைக் காங்கிரீட் கற்களினால் அடைத்துக் கட்டியிருந்தனர். அந்த வாயிலை அடைத்த பலமற்ற காங்கிரீட் கற்களை அகற்றிவிட்டு சிறீலங்கா இராணுவத்தினர் அதன் ஊடாக இரவோடிரவாகத் தப்பி ஓடினர். 365 வருட ஆதிக்க நிலையை விட்டு அவர்கள் புறமுதுகிட்டுத் தப்பிச் சென்றனர்.

யாழ் கோட்டையை விட்டு வெளியேறுவதென தாம் முடிவு செய்தமைக்கான காரணத்தைப் பின்னர் சிறீ லங்கா அரசு கூறியது. யாழ்ப்பாண ஆஸ்பத்திரியை இயங்கச் செய்வதற்காகத் தாம் கோட்டையை விட்டு வெளியேறியதாகக் கூறியது. "புதன்கிழமை கோட்டையை விட்டு சிறீலங்கா இராணுவம் வெளியேறும், அடுத்த 72 மணித்தியாலங்களில் மண்டைதீவை விட்டும் வெளியேறும்" எனக் கூறிய பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னவும், இராணுவத் தளபதி ஹமில்ரன் வனசிங்கவும் உடனடியாகத் தென் கொரியாவுக்குப் பயணமாகினர். கோட்டைக்குள்ளிருந்த ஆயிரம் தானியங்கு துப்பாக்கிகளும், ஆறு இலட்சம் துப்பாக்கி ரவைகளும், 40 மில்லியன் ரூபா பெறுமதியான பணமும் தம்மால் கூடவே எடுத்து வரப்பட்டதாகவும் பின்னர் சிறீலங்கா அரசு அறிவித்தது.

எது எவ்வாறாயினும், எது உண்மையெனில்-

சரியாக 10.48 மணிக்கு, திலீபன் தியாகியாகிய நேரத்தில், விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டத் தளபதி பாணு கோட்டை மீது புலிக்கொடியை ஏற்றினார்.





நான்கு நூற்றாண்டுகளாக ஆதிக்கச் சின்னமாக விளங்கிய யாழ். கோட்டையில் தமிழர் கொடி ஏற்றப்பட்டது.

(முற்றும்)

குறிப்பு: நீலவண்ணன் எழுதிய, கமலம் பதிப்பகத்தின் (யாழ்ப்பாணம்) களம் பல கண்ட யாழ். கோட்டை (யாழ்ப்பாணக் கோட்டை வரலாறு) எனும் நூலின் முகப்புரை அடுத்தவாரம் வெளிவரும்.

படிப்பகம்